**கிருஷ்ணகிரி முதன்மைக் கல்வி அலுவலரின் ( பொ) செயல்முறைகள்**

பிறப்பிப்பவர்- திரு.அ.முனிராஜ். எம்ஏ., பிஎட்.,எம்பில்.,

**ந.மு.எண்- 5607 / ஆ1 /2024 நாள்- .12.2024**

பொருள் தமிழ்நாடு அமைச்சுப்பணி – பணிவரன்முறை 24-07-2022 அன்று நடைபெற்ற தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் (Group iv Services ) மூலம் தேர்வு செய்யப்பட்டு கிருஷ்ணகிரி மாவட்டம், மாடரஹள்ளி, அரசு மேல் நிலைப் பள்ளியில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வரும் திருமதி.செ.தீபா என்பாருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணையிடல்- தொடர்பாக.

பார்வை

1). அரசாணைஎண் 151 ப.க.து (பட்ஜெட்) துறை நாள் 09.09.2022

2). கிருஷ்ணகிரி மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செ.மு.ந.க.எண்- 5931/ஆ1/2023 , நாள்-27.09.2023

3). மாடரஹள்ளி,அரசு மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியரின் ந.க.எண்- 69/2024 , நாள்-26.11.2024

******

கிருஷ்ணகிரி மாவட்டம், மாடரஹள்ளி, அரசு மேல் நிலைப் பள்ளியில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வரும் திருமதி.செ.தீபா என்பார் 24.07.2022 அன்று நடைபெற்ற தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்திய தொகுதி IV தேர்வில் தேர்ச்சி பெற்று நேரடி நியமனம் மூலம் தற்காலிக அடிப்படையில் இளநிலை உதவியாளராக பார்வை - 2இன்படி நியமன ஆணை வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அமைச்சுப்பணியில் வகை 14 ன் கீழ் உள்ள இளநிலை உதவியாளர் பணியிடத்தில் தற்காலிக அடிப்படையில் நியமனம் செய்து ஆணை வழங்கப்பட்டுள்ள கீழ்காண் பணியாளருக்கு பணிவரன்முறை செய்யக் கோரி பார்வை 3 ல் காண் கடிதத்தின் வாயிலாக கருத்துருக்கள் பரிந்துரை செய்து பெறப்பட்டுள்ளதற்கிணங்க, கீழ்கண்ட இளநிலை உதவியாளருக்கு அவரின் பெயருக்கு எதிரே கலம் 4 ல் குறிப்பிட்டுள்ள நாளில் பணி வரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

| வ எண் | பணியாளரின் பெயர் பதவி மற்றும் பணிபுரியும் பள்ளி / அலுவலகம் | இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்தநாள் | இளநிலை உதவியாளர் பதவியில் பணி வரன் முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | திருமதி.செ.தீபா<br>இளநிலை உதவியாளர்<br>அரசு மேல் நிலைப்பள்ளி<br>மாடரஹள்ளி<br>கிருஷ்ணகிரி மாவட்டம். | 29.09.2023 முற்பகல் | 29.09.2023 முற்பகல் |

இப்பணியாளர் மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டுகள் தகுதிகாண் பருவத்தில் வைக்கப்படுவார். தகுதிகாண் பருவக் காலத்திற்குள் பவானி சாகர் அடிப்படைப் பயிற்சினையும், தமிழ் நாடு அரசு அலுவலக நடைமுறை நூல் தேர்வினையும் கண்டிப்பாக தேர்ச்சி பெறவேண்டும்.

இந்த பணிவரன் முறை ஆணை குறித்து சம்மந்தப்பட்ட அலுவலர் அன்னாரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது.

**இணைப்பு – அசல் பணிப்பதிவேடு**

முதன்மைக் கல்வி அலுவலர் (பொ)
கிருஷ்ணகிரி

திருமதி.செ.தீபா
இளநிலை உதவியாளர்
அரசு மேல் நிலைப் பள்ளி
மாடரஹள்ளி, கிருஷ்ணகிரி மாவட்டம் (உரியவழியாக).

நகல்-தலைமையாசிரியர், அரசு மேல் நிலைப் பள்ளி,மாடரஹள்ளி, கிருஷ்ணகிரிமாவட்டம்